DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர்.போஜராஜன் | Caste | : | |
| Father Name | : | ரெங்கசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.02.2026.**

**PW - 22**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் துறையூர் அரசு மருத்துவமனையில், உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.05.2019 அன்று மதியம் 12.00 மணியளவில் நான் துறையூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது, துறையூர் காவல் நிலைய குற்ற எண்.121/2019 வழக்கில் இறந்து போன சுமார் 22 வயதுடைய கார்த்திக் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி துறையூர் காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை காவல் ரமேஷ் என்னிடம் கொடுத்து சவக்கிடங்கில் மேற்படி பிரேதத்தை அடையாளம் காண்பித்தார். நான் அன்று மதியம் 12.30 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினேன். அங்கமச்ச அடையாளங்களை சரிபார்த்தேன். இரண்டு கை மற்றும் கால்களில் விறைப்புத் தன்மை காணப்பட்டது. கண்கள் மற்றும் வாய் மூடியநிலையில் இருந்தது.

**<u>வெளிப்புற காயங்கள்</u>**

வலது கண்ணில் இரத்த கசிவு இருந்தது. கழுத்து பகுதியில் கீறல் காயங்கள் இருந்தது. இடது கையில் வீக்கக் காயம் இருந்தது.

**<u>உள்புற காயங்கள்</u>**

தலை மண்டை ஓட்டுக்கு மேல் சிதைந்த நிலையில் காணப்பட்டது. மூளை பகுதியில் இடது மற்றும் பின்புற வலது புறம் இரத்த கசிவு காணப்பட்டது. வயிற்று பகுதியில் 50 ml திரவம் காணப்பட்டது. மற்ற உடல் உள்ளுறுப்புகள் சாதாரண நிலையில் காணப்பட்டன. பிரேத பரிசோதனைக்கு பிறகு இறந்தவரின் உடலில் இருந்து உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது.

**<u>இறப்பிற்கான காரணம்</u>**

தடய அறிவியல் ஆய்வக அறிக்கை என்னால் 17.07.2019 அன்று பெறப்பட்டது. அதில் இறந்தவரின் உடல் உள்ளுறுப்புகளில் மதுவோ, விஷமோ காணப்படவில்லை என்று கூறப்பட்டிருந்தது. அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.9** ஆகும். அதையும், எனது பிரேத பரிசோதனை அறிக்கையையும் பரிசீலித்து, இறந்தவர், எனது பிரேத பரிசோதனைக்கு 18 மணி நேரம் முதல் 20 மணிநேரத்திற்கு முன்பாக அவருக்கு தலைப்பகுதியில் ஏற்பட்ட காயம் மற்றும் இரத்தக்கசிவினால் இறந்திருக்க கூடும் என்று இறுதி கருத்துரை வழங்கினேன். எனது பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ.10** ஆகும். 6 நபர்கள் மேற்படி நபரை கையால் தாக்கும் போது, அவருக்கு உடல் பகுதியில் ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்படி நபரை ஒருவர் கட்டான் போன்ற ஆயுதத்தால், தலை பகுதியில் தாக்கும்போது அவருக்கு தலை பகுதியில் காணப்பட்ட காயம் ஏற்பட்டு அதனால் அவருக்கு மரணம் ஏற்பட வாய்ப்புண்டு.

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1,3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி இறந்த நபருக்கு கழுத்து பகுதியில் காணப்பட்ட காயம் நகக்கீறல்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இடது கையில் இறந்தவருக்கு இருந்ததாக கூறப்படும் வீக்கக்காயம் இடது கையில் எந்த குறிப்பிட்ட பகுதியில் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் ஆய்வாளர் எந்த ஆயுதத்தையும் காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**2ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறப்பட்டது.**

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.